**தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 226 - குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம் என்பதனால்,

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதாதபோதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு தொடர்பாக உணரப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த வருடத்திற்கான அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்பட்டிராத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.2 பந்தி | சரியான தகவல்களை கணக்குகள் மூலம் முன்வைத்தல். | 1.6.2 (ஆ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் , அத்தேவைப்பாட்டிற்கு முரணான சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் , தமது அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்பான வருமானச் குறியீட்டை மட்டும் உள்ளடக்கும் வகையில் 2022 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான வருமானக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்கள் சார்பாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 44,538,163 சேர்க்கப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகளின் இணைப்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட "ஏசீஏ-1" படிவத்தில் வெளியிடப்பட்ட ஏனைய கணக்கீட்டு அலுவலர்கள் சார்பாக வசூலிக்கப்படுகின்ற வருமானம், அரச கணக்குகள் வழிகாட்டி 2022/05 இன் பிரகாரம் திறைசேரிக்கு தேவையற்றது என்பதால் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது அரச கணக்குகள் வழிகாட்டியின் பக்கம் கவனம் கோரப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானப் பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, வீசா, கடவுச்சீட்டு மற்றும் இரட்டைக் குடியுரிமை பெறுதல் தொடர்பான கட்டணங்களுக்கான ஆரம்ப மதிப்பீடாக ரூபா 8,480,000,000 ஆன தொகை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் , நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 8,730,000,000 என பதிவு செய்யப்பட்டு இருந்தது.. | 2022 ஆம் ஆண்டிற்கான இததிணைக்களத்தின் வருமான மதிப்பீடாக ரூபா 8,730,000,000 பொதுத்திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொதுத்திறைசேரியினால் ரூபா 8,480,000,000 ஆன மதிப்பீடு வழங்கப்பட்டிருந்தது. பொதுத்திறைசேரியினால் 2022 திருத்தப்பட்ட வருமான மதிப்பீடாக மீண்டும் ரூபா 23,500,000,000 ஆன வருமான இலக்கொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அளவிற்கு மேற்பட்டதாக ரூபா 23,840,584,558 ஆன வருமானமொன்று வசூலிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | சரியான மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் வெளிக் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் இணக்கக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் பெற வேண்டிய மீதி ரூபா 143,230,188 ஆன போதிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த மீதி ரூபா 143,017,996 ஆனமையால் ரூபா 212,192 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. 2019 ,2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலும் இவ்வேறுபாடு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்ட | 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட முற்பண ‘‘பீ’’ கணக்கின் இணக்கக் கூற்றில் உள்வாங்கப்பட்ட கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தம் ஆகியவற்றுக்கு இடையேயான ரூபா 260,983.95 ஆன வேறுபாடு 2019 ஆம் ஆண்டில் ரூபா 480,793.16 ஆக அதிகரித்துள்ளது. இந்த பிழையை சரி செய்வதற்கு 2021 மற்றும் 2022 ஆம் | மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு சரியான பெறுமதி கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் மீளாய்வாண்டிலும் அவற்றைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளால், அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட பெறுமதி வரையில் வேறுபாடு குறைந்துள்ளது, மேலும் தவறை முழுமையாக சரிசெய்வதற்கு விசேட கடமை ஒப்படைப்பொன்று மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தத் தக்கவைப்புப் பணமாக 2022 திசெம்பர் 15 இல் பெறப்பட்ட ரூபா 2298 பெறுமதி மற்றும் 2022 திசெம்பர் 30 இல் பெறப்பட்ட ரூபா 1,048,121 ஆன மொத்தப் பெறுமதி ரூபா 1,050,419 ஆன தக்கவைப்பு பணம் வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் வைப்புப் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்படவில்லை. | தாமதமான பிழை காரணமாக வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத இந்த இரண்டு மீதிகளும் சரியாக 2022 ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் உள்ளிடப்பட்டுள்ளன. இம்மீதிகளுடன் இறுதி மீதி 2022 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் வைப்புப் பதிவேட்டில் சரியாக இம்மீதி முன் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதாக தெரிவிக்கப்பட்டது. | வைப்புப் பதிவேடு முறையாக நாளதுவரை யாக்கப்பட வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தமது மும்மாத வருமான அறிக்கை அக்காலப்பகுதி நிறைவடைந்த | காலாண்டு வருமானத்தை தெரிவிக்கும் போது 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட காலதாமதப் பிழையைத் தவிர்த்து, 2023 ஆம் ஆண்டு முதல் காலாண்டு வருமானத்தை ஒப்பிட்டுப் பார்த்து, உடனடியாக குறிப்பிட்ட திகதியில் | சுற்றறிக்கைப் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் வருமான அறிக்கையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியிலிருந்து 15 நாட்களுள் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அல்லது அதற்கு முன்னர் நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுமாறு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அஞ்சல் மற்றும் தொடர்பாடல் சேவைச் செலவு விடயத்திற்காக (செலவு விடய எண். 226-1-1-1402) வருடாந்த மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட ரூபா 50,000,000 நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் கீழ் ரூபா 2,000,000 ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் ரூபா 782,278 அதாவது 39 சதவீதமொன்று சேமிக்கப்பட்டிருந்தது. | சாதாரண சேவையின் கீழ் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளை அஞ்சல் மூலம் அனுப்புவதற்கு வருடாந்தம் கணிசமான செலவு ஏற்படுவதால், அதிகரித்த தபால் செலவினங்களைக் கருத்திற் கொண்டு செலவு விடயம் 1402 இற்கு மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் வெற்று கடவுச்சீட்டுக்கள் பற்றாக்குறையால், சாதாரண சேவை கடவுச்சீட்டுகளை வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டது, எனவே நி.பி 66-ன் கீழ் செய்யப்பட்ட மேலதிக ஒதுக்கீட்டில் 39 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | நிதியேற்பாடு அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 225/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் (04) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின அலகும் தினசரி தமது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான தகவல்களை சிகாஸ் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை மாதாந்த கட்டுநிதி விண்ணப்பங்கள் திறைசேரிக்கு அனுப்பப்படுதலானது இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படாமையால் அதேநேரம் பட்டியல்களுக்காக | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டிய போதிலும் , குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் இவ்வாறு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் பொறுப்பொன்றாக ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் CIGAS மூலம் திறைசேரிக்கு அறிக்கையிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்புகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br><br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **i** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | - | | | |
| | நி.பி.565 (5) | | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்பு அறிக்கையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு மாதமும் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்பை அடுத்த மாத இறுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | நி.பி.563 (3) | | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் திணைக்களம் வைப்புப் பதிவேட்டில் சமப்படுத்தப்பட்ட கணக்குகளைப் பராமரிக்கவில்லை. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி, ஒவ்வொரு மாதமும் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்குகள் வைப்புப் பேரேட்டின் கடைசி சில பக்கங்களில் தயாரிக்கப்பட வில்லை எனவும், அவதானிப்பில் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டுள்ள வாறு தொடருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. | |
| நி.பி.447 (1) | திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட பொது 138 செலவினப் பேரேட்டில், முந்தைய ஆண்டுகளுக்காக கணக்கிடப்பட்ட கடப்பாடுகள் நிரலில் தகவல் உள்ளிடப்படாததுடன் மீதமுள்ள பணத்தின் சரியான அளவை அறிந்து கொள்ளும் வகையில் பொறுப்புக்களும் குறிப்பிடப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தெரிவிக்கப்படா ததன் காரணமாக இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளதா கவும், 2023 ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்ட முறையின்படி இத்தகைய குறைபாடுகள் ஏற்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. | பொது 138 செலவினப் பேரேட்டில், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தகவல் சரியாக பராமரிக்கப்பட வேண்டும். |
| நி.பி.447 (4) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அதன் (5) ஆம் பிரிவின் விதிகளுக்கு உட்பட்டு, அனைத்து பொறுப்புகளும் அவை நிகழ்ந்தவுடன், செலவுப் பேரேட்டு கணக்கின் இடது பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களம் இது தொடர்பாக அவ்வாறு செயற்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தெரிவிக்கப்படா ததன் காரணமாக இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளதா கவும், 2023 ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்ட முறையின்படி இத்தகைய குறைபாடுகள் ஏற்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. | பொறுப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**ii** ஏனைய பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டிகளுடன் இணங்காமை

| | | | |
|---|---|---|---|
| 2010 சனவரி 19 ஆந் திகதிய அமப/09/2101/307/010 ஆம் இலக்கம் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2010 சனவரி 04 ஆந் திகதிய Nscc/2/4/3/2/2/13 ஆம் இலக்க தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் கடிதம் | ஊக்கத்தொகை முறையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அது செயற்படுத்தப்பட வில்லை. | சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில், ஊக்கத்தொகை முறை ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாரம் பெறுமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. 2022ஆம் ஆண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டு செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | ஊக்கத்தொகை முறையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் 2022 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 2,136,922 ஆக இருந்ததுடன், இதில் 03 மாதங்களுக்கும் மேற்பட்ட இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 350,837 ஆகும். அத்தகைய இனங்காணப்படாத கொடுப்பனவுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவு படுத்தப்படவில்லை. | குறிப்பிட்ட கொடுப்பனவுகள் இனங்காணப்பட்டு திருத்தப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிட்ட கொடுப்பனவுகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைறேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 05 செயற்திட்டங்கள் தொடர்பில், பௌதீக முன்னேற்றம் 0 வீதத்திற்கும் 30 வீதத்திற்கும் இடையில் இருந்ததுடன், அந்த செயற்திட்டங்கள் திட்டமிட்டபடி பூர்த்தி செய்யப்படவில்லை. | சேவை வழங்குநர் வழங்கும் விலைகளின்படி, ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாமை, உள்ளீட்டு சேர்வர் கொள்வனவு (Purchasing application server) அமைச்சின் பெறுகை குழுவால் செய்யப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான அடிப்படை பணிகள் 2022 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டமையால் இது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவிகள் என்பதால், போதிய கால அவகாசம் இல்லாமை, மென்பொருள் அபிவிருத்திக்கான செயல்பாடுகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டபோது எழுந்த சிக்கல் நிலைமை, அதிக வேலைப்பழு நிறைந்த பணிச்சூழல் போன்ற காரணங்களால் சம்பந்தப்பட்ட பணிகளை முடிப்பதறுக முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் மரணித்த அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர் கடன் நிலுவைகள் ரூபா 54,757 ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர் | மரணித்த அதிகாரிகளுக்கு இறப்பு பணிக்கொடையொன்று இல்லாமையால் அறவிடுவதற்கு தாமதமாகி வருவதாகவும், திறமையின்மையால் வேலை | கடன் மீதி உடனடியாக அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கடன் நிலுவைகள ரூபா 23,228 மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர் கடன் நிலுவைகள ரூபா 475,252 மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இடைநிறுத்தப்பட்ட ஒரு அதிகாரியின் கடன் மீதி ரூபா 72,496 ஓய்வூதியப் பணிக்கொமையில் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. பணி நீக்கம் செய்யப்பட்ட ஏனைய இரு அதிகாரிகளின் அறவிடவேண்டிய ரூபா 107,526 மற்றும் ரூபா 179,628 ஆன கடன் தொகையை உடனடியாக செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2019 யூன் 27 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் 03(அ) பந்தியின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்ட 10 அதிகாரிகளின் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு 04 முதல் 09 மாதங்களும், இடமாற்றம் செய்யப்பட்ட 09 அதிகாரிகளின் கடன் நிலுவைகளை தீர்ப்பதற்கு 04 முதல் 07 மாதங்களும் எடுக்கப்பட்டிருந்தது. | மாகாண அரச சேவை மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்றின் கடனைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும், இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும், எதிர்காலத்தில் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி கடன்களைத் தீர்க்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் கடன் மீதிகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |
| (இ) | 2017 யூலை 25 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 256/2017 இன் பிரகாரம் வருடாந்த இணக்ககூற்றை சமர்ப்பிக்கும் போது, மாதாந்த திறைசேரி புத்தகங்களுடன் திணைக்கள புத்தகங்கள் இணக்கப்பட்டுள்ளதாக பிரதான கணக்கீட்டு அதிகாரியினால் சான்றுறுதி அளிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரச கணக்குகள் திணைக்களம் அறிமுகப்படுத்திய படிவத்தின்படி, வருடாந்த ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அவதானிப்பதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2017 யூலை 25 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 256/2017 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2016 ஆகஸ்ட் 29 ஆம் திகதி முதல் இன்றுவரை பத்தரமுல்ல சுஹுருபாய கட்டிடத்தின் முதல் மாடியிலிருந்து ஏழாவது மாடி வரை மற்றும் பியச | 2018.07.25 இல் திணைக்களம் அந்த ஒப்பந்தத்தின் வரைவை சட்டப் பிரிவிற்கு அனுப்பியுள்ளதுடன் அதன் | ஒப்பந்தத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வளாகத்தின் ஒரு பகுதி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் வாடகை அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளதுடன், 2016ஆம் ஆண்டு முதல் இன்று வரை வாடகை மற்றும் பராமரிப்புச் செலவுகளாக மொத்தம் ரூபா 1,947,036,851 பாதுகாப்பு அமைச்சிற்கு செலுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக இதுவரையில் ஒப்பந்தமொன்று உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. | பிறகு இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நிதித் திணைக்களம் கட்டட வாடகைப் பணத்தை செலவினத் தலைப்பின் மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு செலுத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் ''சுஹுருபாய கட்டிடத்தின் தரை வாடகைக்கான பண அறவீடு'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள கடிதங்களில் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பத்தரமுல்லை, சுஹுருபாய கட்டிடத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் வாடகை செலுத்தப்படுகின்ற முதல் மாடியில் பல வங்கிகளுக்காகவும் (இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி) இரண்டாவது மாடியில் இரண்டு கூரியர் நிறுவனங்களுக்கும் பரிவர்த்தனைகளுக்கு இடவசதிகள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிறுவனங்களிடமிருந்து வாடகை அல்லது வேறு எந்த கட்டணமோ வசூலிக்கப்படவில்லை. | இந்நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் அளவைஅடிப்படையாகக் கொண்டு கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான முறையில் கட்டணம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பத்தரமுல்லை, சுஹுருபாய கட்டிடத்திலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கிளைகளில் தரை ஓடுகளுக்கு பதிலாக தரைவிரிப்புகள் போடப்பட்டுள்ளதுடன், அவை சேதமடைந்த நிலையில் உள்ள போதிலும் , ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் அத் திருத்தம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் தெளிவு இருக்கவில்லை. | சுஹுருபாய கட்டிடத்தில் இத்திணைக்களம் பயன்படுத்தும் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தரைக் கம்பளத்தை (Vinyl carpet) உடனடியாக புதுப்பிக்குமாறு கோரி 2022.12.12 அன்று பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நவீனமயமாக்கல் பணிகளை விரைவாக முடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | தாபனக் கோவையின் XIV அத்தியாயத்தின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கடமைப் பணிகளுக்காக அவர்கள் பணிபுரியும் இடத்தில் கழித்த இரவுகளுக்காக ஒருங்கிணைந்த கொடுப்பனவுக்குப் பதிலாக கடமைக் கொடுப்பனவொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், அவர்கள் கடமையாற்றும் இடத்தில் பணிபுரிந்தமைக்காக 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கடமைக் கொடுப்பனவொன்று வழங்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 5,640,908 ஆன ஒருங்கிணைந்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் நிரந்தர கடமை நிலையம் விமான நிலையமா தலைமை அலுவலகமா என்ற விடயம் தொடர்பில் நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்ட போதிலும் உறுதியான இணக்கப்பாடு எட்டப்படவில்லை என கோவைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கொண்டு ஆய்வு செய்து எதிர்காலத்தில் பதில் அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | குடிமக்கள் பிரிவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் குறித்து விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்ட போதிலும், அதற்கான மின்னஞ்சலை அனுப்பியதற்கான ஆதாரங்கள் கோப்பில் இடம்பெறாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டதுடன் , மின்னஞ்சலில் செய்தி அனுப்பப்பட்டாலும், பதிலொன்று வராத சந்தர்ப்பங்களில், அது குறித்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குடிமக்கள் பிரிவின் தகவல் அமைப்பில் தற்போது விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் மட்டுமே தகவல் தெரிவிக்கும் வசதி உள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் மின்னஞ்சல்களுக்கு பதிலளித்தல் குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டமையால் தற்போது பலராலும் பயன்படுத்தப்படும் வேறு இலத்திரனியல் முறைமை (WhatsApp மூலம் ) விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடவுச்சீட்டு குறைபாடுகள் விண்ணப்பதாரர்களுக்கு சரியாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதை பின்தொடர்ந்து பார்த்தல் வேண்டும். |
| (ஐ) | இரட்டைக் குடியுரிமைப் பரிந்துரைக் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணக் கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஜூன் 30 வரை 2,160 விண்ணப்பங்கள் | 2021 ஆம் ஆண்டில், கணினி அமைப்பு நவீனமயமாக்கப்பட்டு மின்னஞ்சல் மூலம் நினைவூட்டல் செய்யப்பட்டும் பணம் செலுத்தாத விண்ணப்பதாரர்கள் இருப்பதால், | தற்போதுள்ள குறைபாடுகளை தவிர்த்து உடனடி சேவையை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்டிருந்ததுடன் அந்த விண்ணப்பதாரர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்கப்படடு அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தை வசூலிப்பதற்காக முதல் சந்தர்ப்பத்திலும் தானியங்கி மின்னஞ்சல் செய்தியைத் தவிர வேறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | விண்ணப்பதாரர்களுக்கு பிற மின்னணு வழிமுறைகள் மூலம் (WhatsApp வழியாக) தெரிவிப்பதற்கு தேவையான வசதிகளை வழங்குமாறு தகவல் தொழில்நுட்பத் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஓ) | வெலிசர தடுப்பு முகாமில் பின்பக்க சுவர் உயரம் குறைவாக இருந்தமை, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்டுகொள்ளாமை மற்றும், கேமரா அமைப்பு செயலற்று இருந்தமை காரணமாக கைதிகள் தப்பிச் சென்ற போதிலும் , உரிய நேரத்தில அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெலிசர தடுப்புக்காவல் நிலையத்தின் பின்புறச் சுவர் பகுதியில் அமானோ சீட்களைப் பயன்படுத்தி ள் சீர்செய்யப்படுவதற்கு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக காணப்படகின்ற சில குறைபாடுகளை சரி செய்தல் தொடர்பாக 2022.07.19 மற்றும் 2022.08.26 ஆம் திகதிகளில் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) இற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வத்தளை பிரதேச செயலகத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வத்தளை பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் பின்தொடர்தல் செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 13 உத்தியோகத்தர்கள் ஒரு வேலைத்தடவைக்காக பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில், முகாமிற்கு கைதிகளின் வருகை மற்றும் புறப்பாடு பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர, பாதுகாப்பு அதிகாரிகள் முகாமில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு தினசரி அல்லது சரியான நேரத்தில் உறுதிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்படவில்லை. | முகாமுக்குள் இருக்கும் கைதிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதானது இந்த திணைக்களத்தினால் நாளாந்தம் செய்யப்படுவதாக , சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் செயற்பாட்டு பணிப்பாளரினால் 2021.05.22 திகதியிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் காத்திருப்பு மைய கட்டிடத்திற்குள் நுழைவது அதிகாரிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதால் தினசரி கணக்கீட்டை இததிணைக்களத்தினால் மட்டும் செய்வதற்கு முடியாது என சுட்டிக்காட்டப்பட்டது. | சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளினால் முகாமில் உள்ள கைதிகள் எண்ணப்பட்டு தினசரி அல்லது அவ்வப்போது உறுதிப்படுத்த லொன்று செய்யப்பட வேணடியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2021 மே 22 ஆம் திகதிய சிஆதெ/08/76/2021 ஆம் இலக்க கடிதத்தின்படி, கைதிகள் முகாமிற்கு அனுமதிக்கப்பட்டவுடன் அவர்களின் உடல் பரிசோதனை மற்றும் அவர்கள் எடுத்து வருகின்ற பொருட்களைப் பரிசோதித்தல், பணம் மற்றும் மதிப்புமிக்க பொருட்கள், கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள் அல்லது பிற தகவல் தொடர்பு சாதனங்கள் , முகாமின் அல்லது கைதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான உபகரணங்கள் ஏதுமிருப்பின் அவற்றை சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து வைப்பதற்கு ஒப்புக்கொண்டாலும், அத்தகைய பொருட்கள் தடுத்து வைக்கப்படாததுடன் கைதிகளின் தனிப்பட்ட உடமைகளின் பட்டியலும் முகாமிற்குள் பராமரிக்கப்படவில்லை. | கைதிகள் முகாமிற்கு அனுமதிக்கப்படும் போது அவர்கள் கொண்டு வருகின்ற பொருட்களைப் பரிசோதிப்பதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களம் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்த போதிலும், 2021.11.02 ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையில் நைஜீரியர்களால் அந்தப் பொருட்கள் வலுக்கட்டாயமாக உள்ளே கொண்டு செல்லப்பட்டன. இச்சம்பவம் தொடர்பில் 2021.11.09 அன்று பாதுகாப்புச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன், இதற்காக விசேட அதிரடிப்படையினர் கோரப்பட்டிருந்தனர். அதன்பிறகு, நிலைமையை கட்டுப்படுத்த முடியாதிருந்தமையால் கைதிகளினால் தனிப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டதுடன் , கட்டிடத்தினுள் பிரவேசித்து பொருட்கள் பட்டியல்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான உரிய பாதுகாப்பை உத்தியோகத்தர்களால் வழங்க முடியாத காரணத்தினால் அவ்வாறான பட்டியலை தயாரித்து பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. | 2021 மே 22 ஆம் திகதிய சிஆதெ/08/76/2021 ஆம் இலக்க கடிதத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (க) | 2021 மே 22 ஆம் திகதிய சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் சிஆதெ/08/76/2021 ஆம் இலக்க கடிதத்தின்படி, பல்வேறு தேவைகளுக்காக முகாமிற்கு வெளியே தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களம் இணக்கம் தெரிவித்த போதிலும் அது தொடர்பான பாதுகாப்பு குறித்த திணைக்களத்தினால் | திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) இனால் 2022.01.25 அன்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயற்பாட்டு பணிப்பாளருக்கு இது தொடர்பாக கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் , அதற்கு பதிலளிக்கும் விதமாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் செயற்பாட்டு | வழங்கப்படும் பாதுகாப்பு சேவையின் கீழ், கைதிகள் வெளியில் தங்கியிருக்கும் போது பாதுகாப்பு வழங்குவது ஒரு கட்டாய விடயமாக கருதப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளரினால் சட்டரீதியான சிக்கலொன்று ஏற்படுவதால் அவர்கள் தமது கடமைகளை செய்ய முடியாதருந்ததாக கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. 2023ஆம் ஆண்டிற்கான புதிய பாதுகாப்புச் சேவையைத் தெரிவு செய்வதில், கைதிகள் வெளியில் தடுத்து வைக்கப்படும் போது பாதுகாப்பு வழங்குவது கட்டாயமான விடயமொன்றாக உள்ளடக்கப்பட வேண்டுமென்பது அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குடிவரவு மற்றும் குடியகல்வு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,292 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 1,040 ஆனமையால் மீளாய்வாண்டில் பதவியணி வெற்றிடங்கள் 275 மற்றும் மிகைப் பதவியணி 23 ஆக காணப்பட்டதுடன் செயற்பாட்டு உதவியாளர் மற்றும் ஓய்வறை உதவியாளர் போன்ற 02 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பட்டதாரி பயிலுனர்களாக இத்திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட 24 புதிய அதிகாரிகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதால், செயற்பாட்டு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள | காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாகவும், ஓய்வறை உதவியாளர் ஆட்சேர்ப்பு நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2020 மற்றும் 2020.10.26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தின் பிரதான பதவியொன்றான குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் (புலனாய்வு மற்றும் செயற்பாடு) பதவி பல வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டு வருகின்றது. | இந்த பதவியானது திணைக்களம் சார்ந்த நிறைவேற்று அலுவலர் பதவியாகும். திணைக்களம் சார்ந்த நிறைவேற்று தரம் II இல் 7 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டிய இந்தப் பதவிக்கான தகுதியைப் பூர்த்தி செய்த அதிகாரிகள் தற்போது இல்லை எனபதாக தெரிவிக்கப்பட்டது. | காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |